**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA2753/F/2022**

திரு. பாங்கை அ.சுகுமார் … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஓலக்கூர் (இ) சாரம்,
விழுப்புரம் மாவட்டம் 604 307. … பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **19.11.2021** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **03.01.2022** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **10.02.2022** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.பாங்கை அ.சுகுமார் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.P. நீலவேணி, பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், ஓலக்கூர் (இ), சாரம், விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 19.11.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தாலுக்கா, ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம் அன்னம்பாக்கம் ஊராட்சியில் தீர்மானங்கள் பதிவேட்டின் முழு நகல் 01.01.2020 இன்று வரை உள்ள தகவல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 03.01.2022 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 10.02.2022 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA2753/F/2022</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஓலக்கூர் (இ) சாரம்,
விழுப்புரம் மாவட்டம் 604 307.

**வழக்கு எண். SA2753/F/2022**

**மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்**

திரு. பாங்கை அ.சுகுமார்,
எண்.18/4பீ நடுத்தெரு,
பாங்கொளத்தூர் அஞ்சல் மற்றும் கிராமம்,
திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 604 101.

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025